# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2298/22 - 2022 සැප්තැම්බර් මස 20 වැනි අඟහරුවාදා - 2022.09.20

*2298/22 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 9/73* (XII) (B)

***(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகிய நான், இக்கட்டளைமூலம் -*

*(1)* இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட காணி இடப்பரப்பு, இக்கட்டளை வெளியிடப்படும் தேதியிலிருந்து பயனுறுவதாக, ''மாதம்பவில சரணாலயம்'' எனவழைக்கப்பட்டு அறியப்படும் சரணாலயத்தின் பாகமொன்றாக இல்லாதொழிதல் வேண்டுமென அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்துகின்றேன்; அத்துடன்

*(2)* பரப்பளவில் ஏறத்தாழ *1217.75* ஹெக்டேயர்களைக் கொண்டதும் *2007* ஆம் ஆண்டு செத்தெம்பர் *21* ஆந் திகதிய *1515/21* ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையில் விவரிக்கப்பட்டதும் ''மாதம்பவில சரணாலயம்'' எனவழைக்கப்படும் காணி இடப்பரப்பிலிருந்தானதும் இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்டதுமான இடப்பரப்பைத் தவிர்த்ததன் பின்னர் எஞ்சியுள்ள காணி இடப்பரப்பு ''மாதம்பவில சரணாலயம்'' எனவழைக்கப்பட்டு அறியப்பட வேண்டுமென அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்துகின்றேன்.

**மஹிந்த அமரவீர,**
வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள்
பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு *01,*
*2022,* ஒகத்து *29.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


## அட்டவணை

### “மாதம்பவில சரணாலயத்திலிருந்து” தவிர்க்கப்பட்ட காணி இடப்பரப்பின் எல்லைகள்

இதன் கீழான தரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் கடவல இலங்கை ஆயத்தொலைகள் கட்டமைப்புக்கிணங்கப் பெற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தின் *1:50,000* என்ற அளவின் அடிப்படையின்மீதானதும் கீழே குறிப்பிடப்பட்ட GPS ஆயத்தொலைகளின்படி எல்லை நிருணயிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட தரைபடத்தின்படி பரப்பளவில் 15.5 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதும் “கல் கொரியா” எனவடையாளமிடப்பட்டதுமான அக்காணி இடப்பரப்பு அடங்கலும் :-

ஆயத்தொலைகள் E *123100* N *113798* இன் ஆரம்பப் புள்ளிவரையும், அங்கிருந்து ஆயத்தொலைகள் E *123190* N *113861* வரையும், அங்கிருந்து ஆயத்தொலைகள் E *123316* N *113847* வரையும், அங்கிருந்து ஆயத்தொலைகள் E *123375* N *113774* வரையும், அங்கிருந்து ஆயத்தொலைகள் E *123404* N *113599* வரையும், அங்கிருந்து ஆயத்தொலைகள் E *123355* N *113434* வரையும், அங்கிருந்து ஆயத்தொலைகள் E *123423* N *113250* வரையும், அங்கிருந்து ஆயத்தொலைகள் E *123184* N *113300* வரையும், அங்கிருந்து ஆயத்தொலைகள் E *123074* N *113491* வரையும், அங்கிருத்து ஆயத்தொலைகள் E *123069* N *113598* வரையும், அங்கிருந்து ஆயத்தொலைகள் E *123094* N *113686* வரையும், அங்கிருந்து ஆயத்தொலைகள் E *123100* N *113798* இன் ஆரம்பப் புள்ளிவரையும்.

### மாதம்பவில சரணாலயத்தின் தரைப்படம்




EOG *09 - 0227*